# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சின்னபையன் | மதம் | .. இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. சின்னப்பக்கவுண்டர் | தொழில் | .. விவசாயம் |
| வயது | .. 75 | ஜாதி | .. |
| கிராமம் | .. கோனேரிப்பட்டி அக்ரஹாரம் | நாள் | .. 07.03.2022 |
| வட்டம் | .. சங்ககிரி | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. சின்னபையன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

முதல் விசாரணை .. 07.03.2022

அசல் வழக்கு எண் .. 28/2018

வா.சா.1 – சின்னபையன் - சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட சாட்சி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டார்.

1) 30.04.1984 தேதியிட்ட கிரையப்பத்திரம், ஆவண எண்.514/1984, அசல், வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 05.02.2018 தேதியிட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம், சங்ககிரி பட்டா எண்.951, கணினி வழி நகல், வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

எனக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் மட்டும்தான் பிரச்சனை. பொதுப்பணித்துறை அதிகாரிக்கு எதிராக எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னால், சரிதான். வாய்க்கால் பொதுப்பணித்துறையை சார்ந்தது என்பதால், 5 ஆம் பிரதிவாதியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். 5 ஆம் பிரதிவாதியை பொறுத்து இந்த வழக்கில் எந்த பரிகாரமும் நான் கேட்கவில்லை என்று சொன்னால், சரிதான். அதனால் 5 ஆம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சின்னபையன்

ஒப்பம் / திரு. ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.